# அரியலூர் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR No. | Serial Number and subject in the Agenda | Decision of the Council |
|---|---|---|---|
| | | **அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் துர்முகி வருடம் 27.09.2019 தேதி வெள்ளிகிழமை காலை 11.00 மணிக்கு தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அதுதொடர்பாக கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.** | |
| **27.09.2019** | **96** | **பொருள் எண். 01**<br>அரியலூர் மாவட்ட ஆட்சியர், அரியலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 07/2016/உ.தே, நாள்.09.09.2019ல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பதற்கு அரியலூர் மாவட்டத்தில் உள்ள பல்துறை வளாக கட்டிடத்தின் தரை தளத்தில் அமைத்துள்ள மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் அறைக்கு இடது புறம் உள்ள அறையினை இந்திய தேர்தல் ஆணைய விதிமுறைகளில் உள்ளவாறு பராமரிப்பு பணிகளை நகர்புற உள்ளாட்சி அமைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி கட்டித்தின் இந்திய தேர்தல் ஆணைய விதிமுகைளின் படி புணரமைப்பு மற்றும் பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள ரூ.75,000/—த்திற்கு மதிப்பீட்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியின் அவசியம் அவசரம் கருதி நகராட்சிகள் விதி 15ன் கீழ் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிககலாம்<br>**அலுவலகக்குறிப்பு**<br>உள்ளாட்சி தேர்தல் பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம். | **அனுமதிக்கப்பட்டது.** |
| **27.09.2019** | **97** | அரியலூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை பொழிந்து வருவதால் நகராட்சிக்கு சொந்தமான பட்டு நூல்கார ஏரியின் கரைகள் பலவீனமாக உள்ளதை சீர் செய்யவும், கரையின் உறுதி தன்மையை அதிகரித்து மழை நீர் வீணாகமல் சேகரிக்கவும் 13.09.2019 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும். | **அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>வ. எண்</td><td>விபரம்</td><td>ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.ஹரிகிருஷ்ணன், அரியலூர்</td><td>0.33% மதிப்பீட்டைவிட குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.திருமாறன், அரியலூர்</td><td>0.99% மதிப்பீட்டைவிட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.33% குறைவாக கொடுத்த திரு.ஹரிகிருஷ்ணன், அரியலூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>27.09.2019</td>
<td>98</td>
<td>
அரியலூர் மாவட்ட ஆட்சியர், அரியலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 07/2016/உ.தே, நாள்.09.09.2019ல் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைப்பதற்கு அரியலூர் மாவட்டத்தில் உள்ள பல்துறை வளாக கட்டிடத்தின் தரை தளத்தில் அமைத்துள்ள மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் அறைக்கு இடது புறம் உள்ள அறையினை இந்திய தேர்தல் ஆணைய விதிமுறைகளில் உள்ளவாறு பராமரிப்பு பணிகளை நகர்புற உள்ளாட்சி அமைப்பு நிதியிலிருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி கட்டித்தின் இந்திய தேர்தல் ஆணைய விதிமுகைளின் படி புணரமைப்பு மற்றும் பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள 10.09.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>T.Thirumaran, Ariyalur</th><th>V.Harikrishnan, Ariyalur</th><th>P.Ramalingam, Ariyalur</th></tr>
<tr><td>1.</td><td>அரியலூர் மாவட்டத்தில் உள்ள பல்துறை வளாக கட்டிடத்தின் தரை தளத்தில் அமைத்துள்ள மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர் அறைக்கு இடது புறம் உள்ள அறையினை இந்திய தேர்தல் ஆணைய விதிமுறைகளில் உள்ளவாறு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்</td><td>ரூ.61,912.35/–</td><td>ரூ.62,722.60/–</td><td>ரூ.63,901.80/–</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u><br>
1. குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.திருமாறன், அரியலூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.<br>
2. உள்ளாட்சி தேர்தல் பணி என்பதால் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 27.09.2019 | 99 | அரியலூர் மாவட்ட ஆட்சியர், அரியலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 07/2016/உ.தே, நாள்.09.09.2019ன்படி உள்ளாட்சி தேர்தலுக்கான வாக்குபதிவு வைக்கும் அறையில் உட்புறம் மற்றும் வெளிபுறம் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் பணிகள் நகராட்சிகள் விதி 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.75,000/–னை திரு.திருமாறன், அரியலூர் அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் பதிவு செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது. |

(ஒம்) திரு.ஏ.திருநாவுக்கரசு, M,A.,
தனி அலுவலர்,
அரியலூர் நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையர்,
அரியலூர் நகராட்சி.